உதவியாளர்களும் தற்போது ஒட்டுமொத்த ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 890 பெறுகின்றார்கள். இத்துடன் மேலும் ரூபாய் 110 சேர்த்து, மாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு 1,000 ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிவிப்பு காரணமாக, 88,070 சத்துணவு அமைப்பாளர்களும், அங்கன்வாடி அமைப்பாளர்களும், 82,324 சத்துணவு மைய சமையலர்களும், அங்கன்வாடி மைய முதல் நிலை உதவியாளர்களும், 41,344 சமையல் உதவியாளர்களும், 4,426 அங்கன்வாடி மைய இரண்டாம் நிலை உதவியாளர்களும், ஆக மொத்தம் 2,16,164 பணியாளர்கள் பயனடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால், ஆண்டு ஒன்றுக்கு இந்த அறிவிப்பின் காரணமாக, ஒட்டுமொத்தமாகக் கூடுதலாக 15.41 கோடி ரூபாய் செலவாகும். இந்த ஊதிய உயர்வுகள் 1–9–2006 முதல் நடைமுறைக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிவிப்புகள்

(அ) மானியக் கோரிக்கைகள் மீதான கடைசி நாள் விவாதத்தை பிற்பகல் 1–30 மணிக்கு முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் இன்று கடைசி நாள். பேரவை விதி 185 (3)-ன்படி மானியக் கோரிக்கைகள் மீது விவாதிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நாட்களில் கடைசி நாளன்று மானியக் கோரிக்கைகள் சம்பந்தமான விவாதம் மற்றும் பதிலுரை உட்பட அனைத்தையும் சரியாகப் பிற்பகல் 1–30 மணிக்கு முடிவுறச் செய்து, உடனடி வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். அதாவது, இன்று பிற்பகல் 1–30 மணிக்கு கில்லட்டின் நேரம். எனவே, உறுப்பினர்கள் தங்களது பேச்சினைச் சுருக்கமாக முடித்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு).

4. தகவல் கோரல்

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் மின்சார வாரியத்தின் இழப்புகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

2006 செப்டம்பர் 1]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் இந்த அவையில் வைக்கப்பட்ட தணிக்கைத் துறைத் தலைவரினுடைய அறிக்கையிலே, மின்சார வாரியத்தைப் பொறுத்துக் கூறப்பட்டதில், அடிப்படை வசதி மேம்பாட்டுக் கட்டணத்தை அந்த வாரியம் குறைவாக வசூலித்த காரணத்தினாலே அந்த வாரியத்திற்கு வருவாய் இழப்பு ரூபாய் 77.56 கோடி என்றும், அதேபோலக் காற்றாலை மின்சாரம் மின் வாரியத்திற்கு விற்பனை செய்யப்படுகிறபோது, விற்பனை செய்யப்படுகிற மின்சாரத்தில் 2 சதவிகிதம் மின்வழித் தொடர் இழப்பிற்காகப் பிடித்தம் செய்யாத காரணத்தினாலே, மார்ச் 31 வரையிலான 5 ஆண்டுகளிலே ஏற்பட்ட மிகைச் செலவு 12.96 கோடி ரூபாய் என்றும், அதேபோலக் காற்றாலைமூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்கிற அந்த Wheeling Charge—மின்சாரம் கொண்டு செல்வதற்கான கட்டணம் 15 சதவிகிதம் வசூலிக்கத் தவறியதால், செலுத்துகை மற்றும் பகிர்மான இழப்புகளைக் கழிக்காத காரணத்தினாலே, மார்ச் 31, 2005 வரையிலான 5 ஆண்டுகளுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.204.87 கோடி என்றும், ஆக, 295 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் இழப்பை ஏற்படுத்தியிருக்கிற அந்தத் துறையினுடைய அலுவலர்கள் யார்? ஏன் இவர்கள் இப்படிப்பட்ட வருவாய் இழப்பிற்குக் காரணமாக இருந்தார்கள்? தணிக்கைத் . துறையிலே சொல்லப்பட்ட இந்தப் பெரிய முறைகேட்டினை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அது குறித்து அவர் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன? இந்த இழப்பை ஈடுகட்டுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, காற்றாலைமூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தைக் காற்றாலையின் உரிமையாளருக்குத் தேவைப்படும் வேறொரு இடத்தில் வழங்கும்போது, செலுத்துகை மற்றும் பகிர்மான இழப்புகளைக் கழிக்காததால், கடந்த 5 ஆண்டுகளிலே ரூ.204.87 கோடி மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. காற்றாலைகள் அமைத்தவர்கள் தொழில் அதிபர்கள். அவர்கள் நெல்லை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலே

காற்றாலைகளை அமைத்திருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்குச் சில நேரங்களிலே மின் வாரியத்தின்மூலமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். சில நேரங்களிலே தங்களுடைய தொழிற்சாலைக்கு அந்த மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று மின் வாரியத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே மின்சார வாரியம், அவர்கள் உற்பத்தி செய்த, காற்றாலையின்மூலம் கிடைத்த மின்சாரத்தை அவர்களுக்கு வழங்கும்போது, Distribution and Transmission Line இழப்புகளை அந்தப் பணத்திலேயிருந்து கழித்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அப்படிக் கழிக்காத காரணத்தினாலே, ரூ.204.87 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இதை எப்படிச் சரி செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். காற்றாலை மின் உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றவர்கள் இந்த மாநிலத்திலேதான் இப்போதும் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில் அதிபர்களும் இந்த மாநிலத்திலேதான் தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அடுத்த 5 ஆண்டுகளுக்கு, ஏற்கெனவே அவர்கள் Distribution and Transmission Line Loss–ஐக் கழிக்காததை அவர்களுக்கு நினைவுபடுத்தி, அவர்களோடு கலந்து பேசி, அந்த இழப்பை ஈடு செய்ய முடியுமா என்பதை விவாதிப்பதற்கு, அந்தத் தொழில் அதிபர்களோடு பேசும்படி மின் வாரியத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே...

(ஆ) சென்னை, தண்டையார்பேட்டையில் துணை மின் நிலையம் அமைத்தல்

திரு. பி.கே. சேகர்பாபு: தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சேகர்பாபு, உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டையார்பேட்டை பகுதிக்குட்பட்ட, 7, 8 பகுதிகளைச் சார்ந்த நகர்களுக்குத் தொடர்ந்து ஏற்படுகின்ற மின் தடையைப் போக்குவதற்காக, கடந்த காலங்களிலே 110 Kilo Volt திறன் கொண்ட துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான கருத்துரு உருவாக்கப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டு, இன்னும் இட மாற்றம்